SOFA-I-M

# முதலாம் இடைப்பருவத் தேர்வு

மதிப்பெண்: 50

தமிழ்

வகுப்பு - ஐந்து - __________

நேரம்: 2மணி

| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
| --- | --- |
| இடம்: | வரிசை எண்: |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 5 × 1 = 5

1. 'கழை' - இச்சொல் உணர்த்தும் பொருள் ______________

   அ) கரும்பு  ஆ) கறும்பு  இ) கறுப்பு

2. சரித்திரம் - இச்சொல்லைக் குறிக்கும் சொல் ______________

   அ) நிகழ்வு  ஆ) வரலாறு  இ) சூரியன்

3. புதர் மறைவில் மறைந்து இருந்தது ___________

   அ) ஓநாய்  ஆ) கரடி  இ) நரி

4. புலியின் இளமைப் பெயர் ______________

   அ) புலிப்பறழ்  ஆ) புலிக்குட்டி  இ) புலிக்கன்று

5. நனி என்ற சொல்லின் பொருள் ______________

   அ) பழம்  ஆ) மிகுதி  இ) காடு

**ஆ) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.** 3 × 1 = 3

அ) கனியிடை  ஆ) சொற்சுவை  இ) வண்ணத்தமிழ்

**இ) பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.** 3 × 1 = 3

அ) மடை + தலை  ஆ) வரும் + அளவும்  இ) பனி + மலர்

**ஈ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் எழுதுக.** 3 × 1 = 3

அ) இகழ்  ஆ) அறிவிலர்  இ) அன்றும்

**உ) பொருத்துக.** 4 × 1 = 4

1. தமிழின் இனிமை - பெரிய மீன்
2. அப்துல் கலாம் - அலப்பும்
3. குரங்கு - அக்னிச்சிறகு
4. உறுமீன் - பாரதிதாசன்

**II. பின்வரும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.** 1 × 4 = 4

அ) 'தமிழின் இனிமை' பாடலில் தமிழின் இனிமை எனத் தொடங்கி 'என்பேன் கண்டீர்' என முடியும் பாடலைப் பிழையின்றி அடிமாறாமல் எழுதுக.

(அல்லது)

'அடக்கம்' எனத் தொடங்கும் மூதுரை பாடலைப் பிழையின்றி எழுதுக.

**III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். 6 × 2 = 12**

1. பாரதிதாசன் எதனை 'என் உயிர்' என்று கூறுகிறார்?
2. பண்பால் சிறந்தவர்களாக ஆரீஸ் எவற்றையெல்லாம் குறிப்பிடுகிறார்?
3. செல்வமணி ஆடுகளைக் காட்டிற்கு ஓட்டிச் செல்லக் காரணம் என்ன?
4. மரபு என்றால் என்ன?
5. யாரை அறிவில்லாதவர் என எண்ணிவிடக் கூடாது என ஔவையார் குறிப்பிடுகிறார்?
6. பெயர்ச்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.
7. தமிழைச் சிறப்பிக்கும் பெயர்களைப் பாடப் பகுதியிலிருந்து எடுத்தெழுதுக.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும் 1 × 6 = 6**

1. சகோதரனின் திருமணத்திற்குச் செல்ல வேண்டி வகுப்பாசிரியருக்கு விடுப்பு வேண்டி ஒரு விண்ணப்பம் எழுதுக.

**V. பின்வரும் வினாக்கள் அனைத்திற்கும் விடையளிக்கவும். 10 × 1 = 10**

1. இனியன என்பேன் எனினும் - தமிழை

   என்னுயிர் என்பேன் கண்டீர் - இப்பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எழுதுக.
2. மயில் ____________ (அகவும் / கூவும் / கத்தும்)
3. 'பூப்பறித்தாள்' என்பது ____________ மரபு (வினை மரபு / பெயர் மரபு)
4. கம்மிங் பிரைடே டெம்பிலுக்கு செல்வோம் (தூயத் தமிழில் எழுதுக)
5. "மடைத்தலை" - இச்சொல்லிலிருந்து புதிய சொற்களை உருவாக்குக.
6. குரங்கு மரத்தில் ஏறியது. (இத்தொடரில் உள்ள பெயர்ச்சொல் வினைச்சொல்லை எழுதுக.)
7. சந்திரனின் மற்றொரு பெயர் ____________
8. இனிமை - (இச்சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக.)
9. வண்டு ____________ (ஒலிமரபை எழுதுக.)
10. ஐம்பொறிகளைக் கூறுக.